செ.வெ.எண்:150 நாள்:07.03..2018

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அலுவலர்கள் மற்றும் பல்வேறு தொண்டு நிறுவன அமைப்புகள் பங்கேற்ற தாமிரபரணி தூய்மைப்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அலுவலர்கள் மற்றும் பல்வேறு தொண்டு நிறுவன அமைப்புகள் பங்கேற்ற தாமிரபரணி தூய்மைப்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று (28.02.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்று பகுதிகளை சுத்தப்படுத்தி, தூய்மைபடுத்தும் பணிகள் ஏற்கனவே இரண்டு கட்டங்களாக கல்லூரி மாணவ, மாணவிகள், தொண்டு நிறுவனங்கள், அரசு ஊழியர் சங்கங்கங்களின் பிரதிநிதிகள், தன்னார்வளர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் பங்களிப்புடன் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூன்றாம் கட்ட தூய்மை பணிகள 09.03.2018 மற்றும் 10.03.2018 ஆகிய நாட்களில் அடுத்த கட்ட தூய்மை பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மார்ச் 9ம் தேதி ஆற்று கரைப்பகுதியில் உள்ள சீமைகருவேல் மற்றும் புதர்கள், ஆக்கிரமிப்புகள் இயந்திரங்கள் மூலம் அகற்றும் பணிகளும், மார்ச் 10ம் தேதி கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள், தன்னார்வளர்கள் மூலம் தூய்மைப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி 68 பகுதிகளாக பிரிக்கப்பட்டு தூய்மை பணிகளை மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணிகளில் 23 கலைகல்லூரிகள், 19 பொறியியல் கல்லூரிகள் என மொத்தம் 42 கல்லூரிகள் மற்றும் பல்வேறு தொண்டு அமைப்புகள் ஈடுபடவுள்ளனர். கல்லூரி மாணவ, மாணவிகள் அந்தந்த பகுதி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களையும் தூய்மை பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். தாமிரபரணி கரை பகுதியில் உள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளும் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வெண்டும்.இப்பணிகளில் பல்வேறு தொண்டு நிறுவனங்கள், அரசு பணியாளர் சங்கங்கள் ஈடுபட உள்ளனர். அனைவரும் ஒருங்கிணைந்து தூய்மைப்படுத்தும் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.என பேசினார்.

இக்கூட்டத்தில் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, வருவாய் கோட்டாட்சியர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், அண்ணா பல்கலைக்கழக முதல்வர் முனைவர் சத்யநாதன், தனித்துணை ஆட்சியர் (நிலம்) திரு.ராமசுப்பிரமணியன் மற்றும் அலுவலர்கள், பல்வேறு தொண்டு நிறுவனங்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.